அறப்போர்

12 பக்கம்

16 காசு

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 3 | 3-5-'63 வெள்ளி | கதிர் - (46-1) - 8

பிரதம மந்திரியின் உத்திரவாதம்

" ஆங்கிலம் ஒரு இணை மொழியாக நீடித்து இருக்கும். இந்தி மொழி புழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும வரை ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்."

- ஜவாஹர்லால் நேரு

உறுதி கொள் தோழா!!

★

உழைப்பாளர் பிரச்சினைக்கு உருக்கொடுத்த முதல்வர் கார்ல்மார்க்ஸ !

மே தினம்-

உலகப் பாட்டாளி மக்களின் ஒப்பற்ற திருநாள்!

உழைப்பவனே! நீதான் உலகப்பன் என்று உணர்த்தும் நாள்!!

வியர்வை சிந்திய விவசாயியும், உடம்பை உழைப்பாக்கும் தொழிலாளியும், "நமக்கும் ஒரு நாள்" வரும் என்று, நம்பிக்கை கொள்ளும் நன்னாள்.

ஃ ஃ ஃ

ஏழை! பணக்காரன்!!—என்கிற பேதம் மனிதர்களுக்குள் மட்டுமல்ல; நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் இந்தப் பேதம் இருக்கிறது,

வலுத்தநாடு! இளைத்தநாடு!-என்கிற வேற்றுமையை இந்த நூற்றாண்டில், எங்கும் காண்கிறோம்.

இளைத்தவன் என்பதால் தன்னை இளிச்சவாயன் என்று பிறர் கருத இன்று மனம் ஒப்பவில்லை! இளைத்த நாடுகளும், பிறர் மொழியால் அரசியல் ஆதிக்கத்தால் தன்னை அடிமைப் படுத்துவதை ஏற்க இன்று தயாரில் இல்லை!!

தென்னகம், இளைத்த பூமி, இன்று! மொழி பறி போகிறது! அரசியல் அதிகாரம், 'ஒருமைப்பாடு' என்கிற பெயரால் எங்கேயோ கிடக்கிறது!

நமது விவசாயிக்கு ஒரு வேளை சாப்பாடும் 86காசும் தான் ஒரு நாள் கூலி—என்று அரசின் கணக்கு சொல்கிறது.

ஆலைத் தொழிலாளியின் பிரச்சினைகள் தீர்ந்த பாடில்லை!!

இதைவிடப் பெருங்கொடுமை.........வேலை செய்ய விரும்பியும், வேலை கிடைக்காமல் மனிதர்கள் தவிக்கிறார்கள். ஆண்டுதோறும், இவர்கள், தவிப்பு வளருகிறது!!

ஃ ஃ ஃ

அரசோ,

பணக்காரனை நாடுகிறது! அவன் பின்னால் ஓடுகிறது!!

பணக்காரனுடைய தர்பாரும் நீடிக்கவேண்டும்—

ஏழையும் இருக்க வேண்டும், இதுதான் எமது "மாடல் சோஷியலிசம்", என்கிறது அரசு. மாடல் சோஷியலிசத்தால் மாடி வீடுகள் ஏராளமாகின்றன! குடிசைகள் கீற்றுகளுமற்று நொறுங்குகின்றன!!

சுதந்திர இந்தியாவில் சீமானின் கொட்டம் தீரவில்லை; ஏழையின் வாட்டமும் போகவில்லை; இரண்டுங்கெட்டான் நிலை!!

ஃ ஃ ஃ

இந்த மே தினம்,

நமக்குப் புதிய உணர்வைத் தருமாக. தொழிலாள வர்க்கத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பை அதிகமாக்குமாக.

தி. மு.க.—ஒரு பொதுவுடைமைப் பூங்கா! நமக்கென பொருளாதாரத் திட்டம் உண்டு. 'எல்லோரும் சமம்!' என்பதே அத்திட்டம்.

எல்லா நாடுகளும் சமம்! பேதம் கூடாது! மொழித்திணிப்பு—அரசியல் ஆதிக்கம் ஒழியவேண்டும்!!

குயில் இச்சையாகக் கூவுகிறது! மாடு 'மா' என்று நினைத்தபோது கத்துகிறது!

இவைகளைவிடக் கேடு கெட்டவனா மனிதன்?

உரிமைகள்—ஏட்டுச்சுரையாகிவிட்டன!

ஏதோ ஒரு மாயை—மனமயக்கம்—நமக்கென்ன என்ற போக்கு இனியும் நீடித்தல் அழகல்ல!

ஃ ஃ ஃ

மேதினம், நெஞ்சுறுதியையும் சேவா உணர்வையும் அதிகமாக்குமாக.

உழைப்பின்றேல் உலகில்லை!

மனித நீதியின்றேல் உலகில்லை!!

கதைகளைவிட உண்மையான நிகழ்ச்சிகள் ரசமானவை என்பார்கள்! இதோ, ஒரு செய்தி: நெல்சன் என்பவர் 53 வயதுள்ள வக்கீல். அவருடைய மனைவி, விவாகரத்து செய்து கொள்ள விரும்பினர். "என்னுடைய கணவன் என்னைப் படாத பாடு படுத்துகிருர்", என்பது தான் அந்த அம்மணி திருமணரத்துக்குச் சொல்லும் காரணம். இந்தக்குற்றத்தை வாதிக்க வக்கீல் வேண்டுமல்லவா! அம்மணிக்காக ஆஜராகப்போகும் வக்கீல் வேறுயாருமல்ல, யார் மீது வழக்கு போடுகிருரோ அதே வக்கீலான கணவன்தான்!! அவரைக் கேட்டபோது, "என் கட்சிக்காரருடைய வழக்கை நான் ஏற்று நடத்தப்போகிறேன். மற்றக் கட்சிக்காரர்களிடம் எப்படி பணம் வாங்குவேனே அப்படியேபணமும் வாங்குவேன்" என்று பதிலளித்திருக்கிருர். வெளிநாட்டு நாகரீகம் இப்படியிருக்கிறது!

ஃ ஃ ஃ

சண்டை போட்டுக் கொண்டு வருகிறவர்ளுக்குத் தீர்ப்பு வழங்கவே, நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த நீதி மன்றங்களை நிர்வகிப்பது, ஜகோர்ட்டாகும், உயர் நீதி மன்ற ஜட்ஜுகள் என்ருல் சட்ட 'நாதர்'கள் என்று பொருள்! அவர்களே தகராறு பண்ணிக்கொண்டு கோர்ட்டுக்குப் போகிருர்கள் என்ருல் விந்தைதானே!

பி. நே. மித்தர் என்பவர் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் நீதிபதி, 1949ல் அவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டார், 60 வயது வரை பதவி வகிக்கலாமென்று. அவருடைய மெட்ரிகுலேஷன் சர்டிபிகேட்டில் உள்ளபடி 1961 டிசம்பர் 21னேடு அவருக்கு 60 வயதாகி விடுகிறது. ஆனுல் மித்தர் இதை ஒப்புக் கொள்ளவில்லை. நான் வேலையில் சேர்ந்தபோது என்னுடைய பிறந்த தேதி 27 டிச 1904 என்று கொடுத்திருக்கிறேன்; ஆதலால் 1964 டிசம்பர் 27 வரை ஜட்ஜாகயிருப்பேன் என்ருர். அப்படிச் சொல்லி, பதவியை விட்டுப் போக மறுத்து, தினம் கோர்ட்டுக்கு வந்தார். கல்கத்தா உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி எச். கே. போஸ் சட்டப்படி அவரை ஜட்ஜாக கருதாமல், அவருக்கு எந்த வழக்குகளையும் விசாரணைக்குத் தரவில்லை. ஆதலால் கோபமடைந்த மித்தர் ஜகோர்ட்டில் வழக்குப் போட்டார்! பிரதம நீதிபதியின் மீது இன்னொரு நீதிபதி போட்ட வழக்கு மற்ருெரு நீதிபதியிடம் வந்தது!! அவர் இது சரியல்ல, என்று தள்ளி விட்டார், அப்படி அவர்கள் வயது தவறு என்று "புல் பெஞ்சு"க்கு அப்பில் செய்தார். மூன்று நீதிபதிகள் கொண்ட புல்பெஞ்சு, நீதிபதி வழக்கைத் தள்ளியிருக்கக் கூடாது, விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இப்போது பிரதம நீதிபதி, தனது கீழிருக்கும் 'புல்பெஞ்ச்' அளித்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பில் செய்திருக்கிருர். பிரதம நீதிபதியின் சார்பில் அட்டார்னி ஜனரல் தப்தாரி ஆஜராகிருர்! பழைய செய்தியல்ல இது; இம்மாதம் ஏப்ரல் 19ந் தேதி வந்த செய்தி!!

விற்பனையாளர்களுக்கு

ஒவ்வொரு புதனன்றும் இனிமேல் ஏடு, இங்கிருந்து அனுப்பப்படும்.

அதிகப் பிரதிகள் முன்பணமில்லாமல் அனுப்பப்படமாட்டாது.

கடிதங்கள் அலுவலக முகவரிக்கே எழுதுக.

மணியார்டர், டிராப்டுகளை வீட்டு முகவரிக்கு அனுப்புக.

அலுவலக முகவரி	உரிமையாளர் முகவரி
நிர்வாகி, அறப்போர் 48, பீட்டர்ஸ் ரோட்டு, இராயப்பேட்டை சென்னை-14	உரிமையாளர், அறப்போர் 9ஏ, டாக்டர் சி. பி. ராமசாமி ரோடு அபிராமபுரம் சென்னை-18

பொற்கொல்லர் குமுறல்!

அரசு கவனிக்குமா!!

சென்னை ஒற்றைவாடையில் 30-3-63 அன்று நடந்த மாநாட்டில் அரசினரைக் கோரி ஏழைப் பொற் கொல்லர்கள் விடுத்த முக்கியமான கோரிக்கைகள்:

1. தங்கக் கட்டுப்பாடு மூலமாக வேலையின்றித் தவிக்கும் அணிகலத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலினைத் தொடர்ந்து செய்ய போதுமான அதிகாரப் பூர்வமான தங்கத்தை அரசினரே வழங்க வேண்டுமென்று இந்த மாநாடு அரசினரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

2. நகைத் தொழிலாளர்களுக்கென தனியாக ஒரு கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்தி, அணிகலச் தொழிலாளர்களுக்கு இன்றியமையாத உதவிகளைச் செய்து, அதில் பொன், வெள்ளி, வைரம் போன்ற ஆபரணங்களின் விற்பனைகளை ஷெ கூட்டுறவு சங்கத்தின் மூலமே நடத்தி, நகைத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு தர சர்க்கார் தாங்கள் மேற்கொள்ளக் கருதியிருக்கும் கூட்டுறவு திட்டத்தை இம்முறையில் விரிவாக்கி உடனடியாகத் துவக்கிச் செயல்படும்படி இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

3. தங்கக் கட்டுப்பாடு திட்டத்தினுல் பாதிக்கப்பட்டுளள் பொன், வெள்ளி நகைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணமாக அரசாங்கம் மாற்று வேலை தந்து, பிட்டர், டர்னர், மவுல்டர், கார்பென்டர், கிரைண்டிங், டிரில்லிங், கடிகாரத் தொழில், ரேடியோ தொழில், ரயில்வே மோட்டார் தொழில் ஆகிய தொழில்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து அரசாங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் தொழிற்சாலைகளிலும், சேர்த்துக் கொள்ள அரசாங்கம் உடனடி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று, வேலை தேடித் தரும் நிறுவனங்களில் தற்சமயம் பதிவு செய்துக் கொள்ளப்பட்டுள்ள அணிகலத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைகளை முதலிடம் தந்து உடனடியாக உதவும்படியும், முன்பு நெசவாளர்களுக்கு நிதி தந்து தவியதுபோல், நகைத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் உடனடியாக நிவாரண நிதி அளிக்குமாறு அரசாங்கத்தை இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

4. தங்கக் கட்டுப்பாட்டினுல் தவிக்கும் 45 வயதுக்கு மேற்பட்ட அணிகலத் தொழிலாளர்களுக்கும், குந்தண்ண வேலை செய்யும் அணிகலத் தொழிலாளர்களுக்கும், இப்போது முதியோர்களுக்கு கொடுத்து வருவது போல் உதவிப்பணம் கொடுத்து உதவுமாறு அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. தங்கக்கட்டுப்பாடு சட்டத்தினுல் ஏராளமான நகைத் தொழிலாளர்கள் வீட்டு வாடகை கூட கட்ட இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தால் நகைத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் காலனி கட்டித்தர வேண்டுமென்றும், சென்னை நகரைப் பொருத்த வரையில் மதிப்பிற்குரிய மேயர் அவர்களிடம் வேண்டுகோள் கொடுத்துள்ளதற்கொப்ப புதிய காலனிகளை ஏற்படுத்தியும் காலியாக இருக்கும் காலனிகளைத் தந்துதவும்படியும் இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

6, நகைத் தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே கடினமானதான 14 காரட் தங்கத்தில் தாலிகள் செய்யும் பிரச்சனையை அரசினர் சற்று அனுதாபத்துடன் கவனித்து அதற்குமட்டுமாவது 22 காரட் தங்கத்தில் செய்ய விதிவிலக்களிக்கும்படி இம்மாநாடு அரசினரை வலியுறுத்தி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

7. பல பெரிய நகைக் கடைகளில், வேலையிலிருந்து நீக்கப்பட்ட நகைத் தொழிலாளர்களுக்கு அவர்களது உழைப்புக் காலம், அவர்கள் ஆற்றிய பணி, அவர்களது தற்போதைய நெருக்கடி நிலை ஆகியவற்றை அனுதாபத்துடன் பரிசீலித்து போதுமான உதவித் தொகைகளை வழங்கி ஆதரிக்கும்படி சம்மந்தப்பட்ட கடை முதலாளிகளை இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஆங்கிலக் கதை



தன்னுடைய 80-வது வயதில் அந்த நீதிபதி காலமானபோது பிரான்சு நாடே வருந்தியது. சட்டபிதா-நீதிக்கடல் - கருணையின் வடிவம் - என்றெல்லாம் போற்றப்பட்டவர் அவர். கொலை செய்தவர்கள் அவருடைய கொடுமையான தண்டனைகளுக்குத் தப்ப முடியாது. கெட்டவர்களைத் தண்டிக்கக் கிஞ்சித்தும் அஞ்சாதவர்என்று அனைவரும் புகழ்வார்கள். நாட்டின் கீர்த்தி மழுங்காமலிருக்க குற்றவாளிகளைச் சட்டத்தினின்றும் தப்பாமல் செய்ய, இவரைப்போல இன்னும் சிலர் இருந்தால் போதும் என்று எல்லோரும் பேசுவார்கள்.

அப்பேற்பட்டவர் செத்து விட்டார்! ஏடுகள் யாவும்சோக மாரி பொழிந்தன. வக்கீல்கள் தங்கள் இலட்சிய தீபம் அணைந்துவிட்டதாக வருந்தினர். ஜட்ஜுகள் தங்களது வழிகாட்டியொன்று போய் விட்டதாகப் புலம்பினர். கவர்னர்கள் எல்லாம் வந்து நின்று கடைசி மரியாதையைச் செலுத்தினர். அவரது சடலம் எடுத்துச் செல்லப்பட்டபோது இருவரிசையிலும் இராணுவம் அணிவகுத்துச் சென்றது. அரசாங்க மரியாதைகளோடு அடக்கம் செய்யப்பட்டார்.

ஒரு நாள்! எத்தனையோ பேரைத் தூக்குத் தண்டனைக்கும் ஆயுட்தண்டனைக்கும் அனுப்பிய அவருடைய தீர்ப்புகளை எந்த மேசையில் உட்கார்ந்து எழுதினாரோ அந்த மேசை ஆராயப்பட்டது 'இரகசியம்' என்று குறிப்பிட்டு அவர் எழுதிவைத்திருந்த குறிப்புக்கள்கிடைத்தன. அந்தக் குறிப்புகளுக்கு மேல், "ஏன்?" என்று கொட்டை எழுத்தில் எழுதப் பட்டிருந்தது,

° ° °

ஜூன் 20, 1851:—கோர்ட்டை விட்டு இப்போதுதான் வந்தேன், இன்று ஒருவனைத்தூக்கு மேடைக்கு அனுப்பினேன். தன்னுடைய ஐந்து குழந்தைகளை அவன் ஏன் கொன்றான்? ஏன் கொன்றான்? கொலை செய்வதில் அவனுக்கு என்னஇன்பம் கிடைக்க முடியும்? ஏதோ ஒன்றுக்காகத் தானே கொன்றிருக்க வேண்டும்? அந்த ஒன்று நிம்மதியா? ஆம், நிம்மதி அல்லது ஆனந்தம் ஆகியவைகளுக்காகத்தான் கொலைகள் நடக்கின்றன.படைப்பதிலும் ஆனந்தம்; அழிப்பதிலும் ஆனந்தம். படைத்தல்! அழித்தல்! - இந்த இரண்டே வார்த்தைகளில் தான் உலகமே, உலக சரித்திரமே அடங்கியிருக்கிறது. அழிக்க வேண்டும் என்ற போதை ஏன் ஏற்படுகிறது.

ஜூன் 25: ......உயிருள்ளது என்றால் என்ன! நடக்கவும் அசையவும், தான் நினைக்கின்ற ஒன்றைச் செய்யவும் கூடியது உயிருள்ளது. இந்தக் காரியங்களையெல்லாம் செய்யக்கூடிய சக்திக்குத்தான் 'உயிர்' என்று பெயர். உயிர் என்கிறோமே அதற்கு உருவமுண்டா? அதனால் பூமியில் நிற்க முடியுமா? இல்லை! எலலோருடைய-எல்லா ஜீவராசிகளுடைய - உடலையும் ஆட்டிப் படைக்கிற ஒரு சக்தி உயிர். உலகமெல்லாம் இந்தச் சக்தியால்தான் இயங்குகிறது. ஆனால் இந்தச் சக்தியை யாராவது ஒருவன் நினைத்தால் அழித்து விடமுடியும்.அதுஇயக்கும் உருவத்தைக் கொன்றுவிட முடியும்! பிறகு அது சக்தி இல்லை. அழியும். மறையும்.

ஜூன் 26: கொலைகள் ஏன்? அது இயற்கை. ஆம்,இயற்கை! ஒன்றை இன்னொன்று கொல்வது, தான் வாழ; தனக்கு நிம்மதி தேட! இதனால் கொலைகள் ஆரம்பமாகின்றன. கொலையென்பது இயற்கை;நாம் வாழ வேண்டுமானால் இன்னொன்றை கொன்றுதான் ஆகவேண்டும்; மிருகங்கள் ஒவ்வொரு நிமிடமும் கொலை செய்கின்றன. ஏன்? இன்னொன்றைக் கொன்றால்தான் அவைகள் வாழ முடியும்.மனிதனும் தான் வாழ மற்றொன்றை அழிக்கிறான்; அப்படி அழிப்பதில் மகிழ்ச்சியும் களிப்பும் பெறுகிறான். விளையாடும் குழந்தை கையிலகப்படும் பூச்சி பொட்டுகளைக் கொல்கிறது! குருவி பறவைகளைச் சுடுவதில் நாட்கூட இன்பம் பெறுகிறோம்!! சிலருக்கு, இந்த இன்பம், மிருக ராசிகளோடு அடங்காமல், மனிதர்களைக் கொன்று பார்ப்பதிலும் தூண்டுகிறது. ஆமாம்! ஒரு காலத்தில் நரபலி கொடுத்து நாம் திருப்தி அடைந்தோம். இப்போதுள்ள உலகின் வாழ்க்கை முறைகள் இதை ஒப்பவில்லை. அதனால் கொலையைக் 'குற்றம்' என்கிறது! கொலை செய்வதைக்கண்டித்துக்கொலைகாரனை நாம் தண்டிக்கிறோம். ஆனாலும் நமக்குள்ளேயே அடங்கியிருக்கிற கொலைப் பசியைத் தணித்துக் கொள்ள—நேருக்கு நேர் கொன்றால் குற்றம் என்பதால்! — அடிக்கடி போர்களை உண்டாக்கிக் கூட்டம் கூட்டமாக அடித்துக் கொண்டு சாகிறோம். போர் என்பது இரத்தக் குளம்! வீரர்கள் அடித்துக் கொண்டு செத்ததை, விளக்கடியில் உட்கார்ந்து படித்து நாம் ஆனந்தப்படுகிறோம்; பாராட்டுகிறோம். சாதாரணமாக ஒருவனை இன்னொருவன் கொன்றால், குற்றம். ஆனால் பல பேரைக் கொன்ற வீரர்களைக் நாம்:குற்றமா சுமத்துகிறோம்;



இல்லை! பாராட்டுகிறோம்; பதக்கங்கள் அணிவிக்கிறோம்; மகா வீரன் என்கிறோம்; மாலைமரியாதைகள் தருகிறோம்; பெண்கள் ஓடிப் போய்ப் பார்க்கிறார்கள்; கூட்டத்தினர் கைதட்டி வரவேற்கிறார்கள். எதற்காக? ஒரு இடத்தில் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்று இரத்தத்தை ஓட விட்டதற்காக! ஏன் இது? கொலை என்பது இயற்கை, நம்முடையஉள்ளத்துக்குள்புதைத்துவைத்திருக்கும் ஒரு ஆசையாகும், அதைப்போல ஆனந்தமானது வேறெதுவும் இல்லை அதைச் செய்கிறவனைத் தான் நாம் போற்றுவோம்; போற்றுகிறோம்.

ஜூன் 30: கொலை செய் என்பது இயற்கையின் சட்டம். ஏனெனில் இயற்கை எப்போதும் இளமையை விரும்புகிறது. சீக்கிரம் கொல்! சீக்கிரமாக அழி!-என்று இயற்கை நம்மையெல்லாம் தூண்டுகிறது. அப்படி அழிந்தால்தானே புதுமை பூக்க முடியும். பழமைபோய் புதுமை யோடு இயற்கை இளமையாக இருக்கமுடியும்?

ஜூலை 2: உயிரோடிருப்பது என்றால் என்ன? அது ஒரு பிரமையே தவிர, வேறெல்ல. பிரயாணம் செய்யும் போது, கூட்டங்கூட்டமாக நிற்போரைப் பார்க்கிறோம்! கப்பலில் போங்கள். கூட்டம் தெரிவதில்லை; கடலில் போகப் போக வெறுங்கரை மட்டுமே காட்சி தருகிறது. வேகமான இரயிலில் சன்னலடியில் உட்கார்ந்து கொண்டு போங்கள். ஆங்காங்கே கழனிகளிலும் கடை வீதிகளிலும் மனிதர்கள் எப்படித் தெரிகிறார்கள்? அவர்கள் எதைக் கண்டார்கள்? வாழ்க்கையில் எதை அடைந்தார்கள்? பிறப்பது-போராடுவது-எறும்புகளைப் போல் ஊர்வது-ஒரு நாளைக்குச் சாவது தவிர, இந்தியாவிலும் சீனாவிலுமிருக்கும் பல கோடி ஏழை மக்கள் என்ன சுகத்தைக்கண்டார்கள்? அவர்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது!

தனிநபர் என்பவனைப் பற்றி யார் பேசுகிறார்கள். அவன் சைபர்! பூஜ்யம்! அவனுக்கென்று சரித்திரம் இருக்காது. ஆனால் அந்த மனிதனுடைய சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைக் கொல்லும்போது, சரித்திரமாகிறது; யுத்தம் என்கிறோம். இதுதான் உலகத்தின் நியதி; ஒரு நாட்டின் நியதி வீட்டின் நியதியுங்கூட......... ஒருவனைக் கொல்லுதல் குற்றம்! ஏனெனில் அவன் பிறந்ததும், இந்த ஊர், இன்னார் மகன், இன்ன பெயருடையவன் என்று நாம் வைத்துக் கொள்கிறோம். அதனால் இன்றுள்ள சட்டப்படி அவன் பாதுகாக்கப்பட வேண்டியவனாகிறான்! இப்படிப்பட்ட சட்டமோ, பாதுகாப்போ இல்லாமல் ஆபிரிகா போன்ற காடுகளில் அலைகின்ற மக்கள் கூட்டத்தின் நிலையென்ன? பாலைவனத்தில் அலைகின்ற அவனைக் கொல்லுங்கள்; மலைக்குன்றில் உலவும் அவனை உருட்டித் தள்ளுங்கள்; யார் அதைப்பற்றி என்ன சொல்ல முடியும்! எவனைக்கொன்றீர்கள் என்று உங்

(9-ம் பக்கம் பார்க்க)

சாப்பாட்டுக்கு மனிதக்கறி!

உண்மையான நிகழ்ச்சி!!

புது டில்லியிலுள்ள ஒரு ஓட்டலில் மனிதக் கறி சமைத்துப் போட்ட நிகழ்ச்சியை உ. பி. போலீசார் கண்டுபிடித்துள்ளனர். கால் தொடைக் கறி மிகவும் நன்றாகயிருக்கிறதென்று, வியாபாரம் செய்யப் பட்டதாம்!

சீராஜ் உத்தீன் என்கிற ஆள் 9 வயதிலிருந்து 18 வரையுள்ள சிறுகுழந்தைகளைப் பிடித்துக் கொண்டுபோய் இப்படி கறித்துண்டுகளாக்கி, அந்த ஓட்டலுக்கு விற்று வந்தானும்!

கான்பூரில் கைது செய்யபட்டு வைக்கப்பட்டிருக்கும் இந்த வெறியன், தானே, அக்கறியைச் சமைத்து சாப்பிட்டதுண்டென்றும் ருசியாயிருக்குமென்றும் போலீசாரிடம் சொல்லியிருக்கிறான்.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 3 | 3-5-'63 | கதிர்-(46-1)-8

மறுமலர்ச்சி

"அப்பா தம்பி! நீ என்ன செய்து பிழைக்கிருய்?", என்று ஒருவர் கேட்டாராம்.

"அய்யா! நான் எழுதிப் பிழைக்கிறேன்", என்று பதில் தந்தானும் அந்த வாலிபன்.

"எழுதுகிறேன்! என்று சொல். அதனல் பிழைக்கிறேன் என்று சொல்லாதே", என்று திருத்திஞராம் அந்தப் பெரியவர்.

"இல்லே! நானே ஒரு பத்திரிகையும் நடத்துகிறேன்", கொஞ்சம் பெருமையோடு சொன்னனும். ஏனெனில் பெரியவர், பெண்கொடுக்க வந்தவர்! வாலிபன், மணமகனுகிவிடத் துடித்தவன்!!

"அப்படியா? அப்போது, நீ எப்போதே பிணமாகி விட்டாய். நீ எப்படி மணமகனுக முடியும்! போ! போ!!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாராம், பெரியவர்.

ஃ ஃ ஃ

எப்போதோ படித்தேன் இந்தத் துணுக்கினே! நகைச் சுவையை மட்டுமே அப்போது ரசித்தேன்!! ஆனல், அதில் பொதிந்துள்ள உண்மையை நான் இப்போது மனதார உணருகிறேன்-

சிந்திப்பதற்கும் சிந்தித்ததை எழுதுவதற்கும் பொன்னும் மணியும் கொட்டிக் கொடுத்ததாக நாம் பண்டைய மன்னர்களின் சரித்திரத்தில்தான் படிக்க முடியும். எந்த எழுத்தாளனும் தன் மகனும் தன்னேப்போல எழுத்தாளனுக வர வேண்டும் என்று இன்று எண்ணமாட்டான். கௌரவமான தொழில் என்கிருர்கள்! இருக்கலாம்—அந்தக் 'கௌரவம்', பணப்பெட்டியுடையவர்களுக்கு மட்டுமே, கிடைக்க முடியும்.

வண்ணத்திப்பூச்சிப்போல பல நிறத்தோடு ஏதோ இரண்டொரு பத்திரிகைகளுக்கு அனுப்பி விட்டு, 'சுகமாக'வாழாமல் ஒரு கொள்கைக்காக எழுதுவது, அதை வளர்க்கவே இருப்பது என்று தங்களே ஆளாக்கிக் கொண்டவர்கள் பாடு—திண்டாட்டம்தான்! ஆனல், அவர்களும் வாழ்க்கை நடத்த வேண்டுமே. பொதுப்பணியைச் செம்மையாகச் செய்ய வேண்டுமே! தொழிலில்லாமல், எப்படி வாழ முடியும்? அரசியலில் ஈடுபட்டு பசியையும் பட்டினியையும் நாம் தாங்கிக் கொள்ளலாம்! நம்மோடு தாய் தந்தை மனேவி மக்கள் என்று இருக்கிருர்களே—நாம் பாடுபடுகின்ற சமூகத்தில் அவர்களும் ஒரு அங்கம்தானே! அவர்களுடைய நன்மை தீமைகள் அரசாங்கத்தின் பொறுப்பாகயில்லேயே; தனி மனிதனுடைய பொறுப்புகளாக இருக்கின்ற இக்காலத்தில் தனிநபர்தானே போராடி அவர்களேயும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது!!

மூன்ருண்டுகளுக்கு முன்பு அறிஞர் அண்ணுவின் மனம் நிறைந்த வாழ்த்துகளோடு, 'அறப்போர்' ஏட்டினே நான் துவக்கிய காலத்தில், நம்பிக்கை அலேகளோடு, உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுவிட முடியும் என்கிற பேரார்வத்தோடும் தான் ஈடுபட்டேன். மகிழ்ச்சியோடு, வந்ததையெல்லாம், ஏட்டை வனப்புள்ளதாக்க வேண்டும் என்றே கொட்டினேன். ஏட்டின் வனப்பையும் வசிகரத்தையும் நண்பர்கள் மனதாரப் பாராட்டினுர்கள்! புகழ் தந்த போதையில், கணக்கேடுகளேப் புரட்டவேண்டிய அவசியத்தை மறந்தேன். அதோடு, இடையில் தேர்தல் வந்தது! நேரமும் நினேப்பும் தேர்தலுக்குப்பிறகு, என் தொகுதியோடு கலந்தது. இரண்டு திங்களுக்கு முன்பு ஒரு நாள்! கணக்குகளேப் புரட்டியபோது திடுக்கிட்டேன்!! நான் எண்ணியதைவிட இருமடங்கு இழப்புக்கு ஆளாயிருந்தேன்.

வெளியில் செல்கின்ற பத்திரிகையின் 'தொகை' கவர்ச்சியாயிருந்தது! இவ்வளவு போகிறதா—என்று தற்பெருமைகூட வந்தது. ஆனல், போகின்ற பத்திரிகைக்கும் வருகின்ற தொகைக்கும் இடையிலுள்ள பெருவெளி என்னேத் திடுக்கிட வைத்தது. விற்பனேயாளர்களிடம், மிகத்தாராளமாக, அறப்போர் இருந்திருக்கிறது!!! ஒரு சில குறிப்பிடக்கூடிய விற்பனேயாளர்களேத் தவிர, மிகப்பெரும்பாலோர், 'நம்மஅரங்கண்ணல் தானே!' என்று அதிகமான உரிமை எடுத்துக்கொண்ட விஷயம் அப்போதுரோன் புரிந்தது! அதோடு, சொந்த அச்சகம் இல்லாததால் மாதாமாதம் அச்சுக்கு ஆகிய செலவையும் பார்த்தேன். மாதம், அரை ஆயிரம் ரூபாய் என்று கணக்குக் காட்டியது! இரண்டு ஆண்டுகளில், சுமார்பத்தாயிரத்துக்குமேல், அறப்போரிலிருந்து சென்றிருக்கிறது. அந்தக், கணக்கையெல்லாம் பார்த்ததும், அச்சகமில்லாமல் ஏடு நடத்த இயலாது—புதிய விற்பனேயாளர்கள் இன்றி எதுவும் செய்ய முடியாது—என்று மனதில் பட்டதால், பத்திரிகையை நிறுத்த முடிவு செய்தேன்! பதிமூன்று வாரங்களாக, அறப்போர், ஓய்வு பெற்றது.

பேனு பிடித்தவன் மனமும் கையும் சும்மாயிராது என்பார்கள். எனது கழனிகள் என்னேக் காப்பாற்றி விடும்! ஆனல், நான் ஆர்வத்தோடு தொடங்கிய, என்உயிருக்குயிரான கொள்கையேடு முடங்கிக் கிடப்பதைப் பெரும் சுமையாக தினம் தினம் உணரலானேன் அந்தப் பளு தாங்க முடியாததால், மீண்டும் அறப்போரைக் கொணர முடிவு செய்தேன்.அச்சகமும் அமைத்தேன் 'அசோகன் அச்சகம்' எனும் பெயரில்! பெரிய இயந்திரமும், புதிய அலுவலகமும், பொறுப்பான பணிமனேயினருடனும்!! அச்சகம் இன்னும் இரு கிழமைகளில், மின் வசதி வந்ததும் இயங்கும்!! இந்த முயற்சியில் என்னே ஆர்வவத்தோடு இழுத்து, ஆந்திரா சென்று இயந்திரம் முதலியவைகளே வாங்கி உதவிய சென்னே 79-வட்ட தி. மு. கழக செயலாளர், தோழர்-தொழிலாளி—சோக்கலிங்கம் இல்லாவிடில், நான் மீண்டும் துணிந்து ஈடுபட்டிருக்க மாட்டேன். 'பயப்படாதேண்ணு! கடனே உடனே, நானிருக்கிறேன்', என்கிருர்! பார்ப்போம் என்று மீண்டும் ஈடுபடுகிறேன்!! அறப்போர் மூன்ருவது ஆண்டில், எடுத்தடி வைக்கிறது.

எனக்குக் கழக உடன் பிறப்புகளேத் தவிர செல்வம் வேறில்லே! அண்ணனும் தம்பியும் நீங்கள்தான்! சொந்த வாழ்வில் உடன்பிறப்பில்லாதவன்நான்! எல்லோரையும் நம்பி, அடக்கமாக வாழ்வது, என் இயல்பு. இப்போதும் உங்களேயே நம்புகிறேன். அறப்போர் வளர, நீங்கள் ஆயிரக்கணக்கில் நன்கொடை தாருங்கள் என்று நான் கேட்கவில்லே. இருபத்தோரு ஆண்டுகள் பொது வாழ்க்கையில், இடம் மாருமல், தடம் புரளாமல் இருப்பவன் என்கிற தன்னிறைவு எனக்குண்டு. என்ருலும், நான் உங்களே, 'எனக்கு அன்பளிப்புத் தாருங்கள்!' என்று கேட்கவில்லே. என் உடன் பிறப்புகளான உங்கள் நிலேயும் நான் அறிந்ததுதான். ஆனல் ஒவ்வொருவரும், அறப்போருக்கு ஓராண்டுச் சந்தாதாராக ஆகலாம்! உங்களுக்கு எட்டு ரூபாய்தான்! ஆனல், அறப்போருக்கு, அது பெருவெள்ளமாகும்!! என் உடன் பிறப்புகளேயும், என்மீது பாசமும் பற்றும் வைத்திருப்பவர்களேயும், இச்சமயம் நான் விரும்பி வேண்டிக் கேட்பது இந்த உதவிதான். எதிர்பார்க்கிறேன், உங்கள் இதயம் வழங்கும் என்று நம்பி.

விற்பனேயாளர்களில்-சென்னே, மதுரை, கோவை போன்ற பேரூர்த் தோழர்களின் அன்புக்கு என் நன்றிகள்! அவர்களேப் போலவே, ஆரம்பகால முதல் எனக்கு ஒத்துழைப்புத் தரும் பலர் இருக்கிருர்கள். புதிதாகவும் பலர் நியமினமாகியிருக்கிருர்கள். அவர்களும் அறப்போருக்கு தங்களாலான ஒத்துழைப்புத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஏடு துவளாமலும், தொடர்பு அருமலுமிருக்க, அவர்களேப் பெரிதும் நான் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

புதிய நம்பிக்கையோடு பூக்கும் அறப்போர், புதுப்பொலிவுகளேப் பெறும்! தன்னுலான பணியினே நாட்டுக்கும் கொள்கைக்கும் ஆற்றும்! எல்லோரும் எனக்கு உதவுங்கள். வசதியுடையோர், ஆண்டுச் சந்தாக்களே அனுப்புங்கள். எழுதுவோர், எழுதுங்கள், அரிய யோசனேகளே வழங்குகள். நான் உங்கள் சகோதரன்! அறப்போர் உங்கள் ஏடு!! வேறென்ன நான் சொல்ல?

சகோதரன்,

அரங்கண்ணல்

★ மாடி வீட்டுப் பணத் தோட்டம்! ★

"அஞ்சலையா? எங்கே வந்தே!"

"அஞ்சுரூபாயிருக்குங்க..."

"மாதா மாதம் பத்து ரூபாய் கொண்டு வருவீயே..."

"பாவி மகன் அஞ்சுரூபாயை எடுத்துக்கிட்டுப் போயிட்டான்..."

"கொடு! ஆகமொத்தம் இது வரையில் உன் கணக்கிலே 205 ரூபா ஆயிருக்கு..."

"நல்லதுங்க, வர்ரேன்..."

"வா, வா! ராத்திரியோ, பகலோ, எந்த நேரம் வேணும்னலும் பணம் உன் பெட்டியிலே யிருக்கிறது போல நினைச்சுக்கிட்டு வந்து நீ கேட்கலாம்"

"அந்த நம்பிக்கை யாலே தானுங்களே, ஏழைபாழைங்க உங்ககிட்டே கொண்டாந்து பணத்தைப் பாது காப்பா கொடுத்து வைக்கிறோம்."

°°

"ஆறுமுகம் செட்டியார் வாளா!"

"ஆமாம்! கடைக்குச் சரக்கு வருதாம். கல்கத்தாவிலேருந்து கம்பெனிக்காரன் எழுதியிருக்கான். பூராச் சரக்கையும் எடுக்கக் கையிலே கொஞ்சம் பணம் தட்டு..."

"அதனலே என்ன! எவ்வளவு வேணுமோ வாங்கிட்டுப் போங்கோ. வட்டிதான் உங்களுக்குத் தெரியுமே..."

°° °° °°

தமிழ் நாட்டிலுள்ள ஒரு கோடீசுவரரைப் பற்றி இன்றும் செட்டி நாடு வட்டாரத்தில் பேசப்படுவதுண்டு. விதவைகளும், விதரணை தெரியாதவர்களும் தங்களிடமுள்ள பணத்தை அவரிடம் பாது காப்புக்காகக் கொடுத்து வைப்பார்களாம். அவரும், அதைப் பத்திரமாக வைத்திருந்து கேட்கும் போது கொடுப்பாராம்! கேட்கும் போது அவர் கொடுப்பார் என்பது தான் அவர்களுக்குத் தெரியுமே யொழிய தாங்கள் கொடுக்கும் பணம் ஆறுமுகம் செட்டியார் போன்றவர்களுக்கு வட்டிக்குத் தரப்படுவது அவர்கட்குத் தெரியாது!!

"கோடீசுவரன்! அவருக்கென்ன? அஞ்சலையின் இருநூறு ரூபாயா அவருக்குப் பெரிது," என்றே எல்லோரும் கருதுவார்கள். அவர் பணக்காரராயிற்றே!! அஞ்சலை மட்டுமா, கருப்பாயி, முத்தழகி, வள்ளியம்மை, இப்படி நூற்றுக் கணக்கானேர் ஆயிரமும் இரண்டாயிரமும் பத்தாயிரமுமாக அவரிடம் கொடுத்து வைத்தால்...? அவ்வளவு பணத்தையும் "தேவை"ப் படுகிறவர்களுக்கு "வட்டி"க்குக் கொடுக்கும் போது, எவ்வளவு, வட்டி கிடைக்கும்! கடன் கொடுப்பதற்குப் பதில், திடீரென, மில்ஒன்று கட்ட வேண்டும் என்கிற ஆசை வருகிறது, பிரபுவுக்கு. பலர் கொடுத்தப் பணத்தையும் போட்டு, ஆலையைப் பிரம்மாண்டமாக அமைக்கலாமல்லவா, அவர்!! பணம் கொடுத்தவர்கள், எல்லோரும் ஒரே நேரத்திலா வந்து கேட்கப் போகிறார்கள்? அப்படிக் கேட்டால் இலட்சக்கணக்கான ரூபாய்களை வள்ளியம்மைக்கும், வடிவழகிக்கும், நாச்சியம்மைக்கும் கொடுக்க வேண்டி நேரும்! எப்போதாவது தானே, "என்னங்க! ஒரு இருநூறு வேணும். என் பணத்தில் கொஞ்சம் வேணும்", என்று கேட்கப் போகிறார்கள்.

அஞ்சலை கேட்கும் போது, "இந்தா!" என்று கொடுத்து விட்டால், "ஐயாவிடம் பணம் கொடுத்து வைத்தால் எப்பப் போனலும் கிடைக்கும்", என்கிற நம்பிக்கை அவளுக்கு அதிகமாகிறது. இலட்சக்கணக்கான ரூபாயைப் புரட்டுகிறவருக்கு அஞ்சலை வந்து கேட்கிற நேரத்தில் இருநூறுரூபாய் தருவது பெரிதல்லவே!! ஊர்தோறும் பெரிய மனிதர்கள்-பிரபுக்கள் வட்டிக் கடை மகிபர்கள்--வாழ்ந்து வரும், வகையிது வென்பதை நாமறிவோம். கலம் போட்டுப் பலமூட்டை அறுப்பது விவசாயம்! விதைக்காமலே பணத்தை விளைவித்துக் கொழுத்தவர்கள், இவர்கள்!!

பாங்கி முறையும் சற்றேறக் குறைய இதே 'நம்பிக்கை'யின் அடிப்படையில் உருவானது தான். இருக்கின்ற பணத்தைக் கொண்டு போய்ப் போடுகிறோம்! தேவைப்படும் போது, வேண்டிய அளவுக்கு 'செக்' எழுதிக் கொடுத்து வாங்கிக் கொள்கிறோம்!! நாம் 'செக்' தரும் போது, பாங்கி, பணம் தருகிறது. அப்படித்தர முடியாமலும் சில சமயம் பாங்கிகள் திண்டாடும். அப்படியானல், நாம் கட்டிய பணம் எங்கே போயிற்று? பாங்கியை நடத்துகின்றவர்கள், நமது பணத்தையெல்லாம், ஆலைகளை அமைக்கவும் ஆறுமுகம் செட்டியார் போன்றவர்களுக்குமாகச் செலவு செய்து விடுகிறார்கள்! அப்படிச் சென்ற பணம் வட்டியும் முதலுமாய்த் திருப்பித்தர முடியாமல் போகும் போது, பாங்கி கவிழ்கிறது! ஏழை பாழைகள், "ஐயோ, என் பணம் போச்சே!" என்று நடுத் தெருவில் நிற்கிறோம்!!

இந்தியாவில் சர்க்காருடைய தொடர்போடு இருப்பது ஸ்டேட் பாங்கி ஆப் இந்தியா (முன்பு ரிசர்வ் பாங்கி), இதில் போடும் பணத்துக்கான பொறுப்பிலும், நிர்வாகப் பொறுப்பிலும், பெரும் பங்கு சர்க்காருக்குண்டு. இந்தப் பாங்கி மட்டுமல்ல! இந்தியன் பாங்கி, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி, கரூர் பாங்கி, கனரா பாங்கி, பஞ்சாப் நேஷனல் பாங்கி... என்று எத்தனையெத்தனையோ இருக்கின்றன!!

இந்தியத் துணைக் கண்டத்தில்

மொத்தமுள்ள பாங்கிகள்—	304
ஷெடியூல்ட் பாங்கிகள் (தனியார்)	82
82ல் வெளிநாட்டுப் பரிவர்த்தனை செய்வன	14

இவைகள் எத்தனை ரூபாய்களைக் 'கொடுக்கல் வாங்கல்' செய்கின்றன தெரியுமா! அந்தப் புள்ளி விபரத்தையும் உற்று நோக்கினல் தான், நாட்டின் பொருளாதார அமைப்பில், பாங்கிகளுக்குள்ள முக்கிய இடம் விளங்கும்!!

68 (72—14) ஷெட்யூல்ட் பாங்கிகளில் 11டைய இயங்கு முதல் ரூ 25 கோடிக்கு மேல்

பாங்கிகளில் 13டைய இயங்கு முதல் ரூ 7.50 கோடியிலிருந்து ரூ 25 கோடி வரை

மீதி பாங்கிகள் ரூ 7.50 கோடிக்குக் கீழ்.

இந்தப் பாங்கிகளில் மக்கள் போட்டுள்ள பணத்தின் அளவை மனதில் வையுங்கள்!! இதே போல, எல்லாப் பாங்கிகளிலும் ஏராளமாகப் பணம் மக்களால் போடப்பட்டிருக்கிறதல்லவா?

மக்கள் போட்டுள்ள விபரம்

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா— 661.09 கோடி

12 தனியாருடைய பெரிய பாங்கிகளில் மட்டும்—969.00 கோடி

மீதமுள்ள 269 பாங்கிகளில் மட்டும் 191.00 கோடி

வெளிநாட்டுப் பரிவர்த்தனை பாங்கிகளில்—253.00 கோடி

ஆகமொத்தம் டெபாசிட் தொகை 2074.09 கோடி.

இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்களையும் பாங்கிகள் என்ன செய்திருக்கின்றன என்று அறிய ஆவல் வரும் உங்களுக்கு? பணத் தோட்டமன்றோ, பாங்கிகள்! தங்களிடம் சேர்ந்த பணத்தை வட்டிக்கு, ஆறுமுகம் செட்டியார் போன்ற வியாபாரிகளுக்கும், ஆலைகள் தொழிற் சாலை கட்டுவோருக்கும் கொடுத்து "பாங்கித் தொழிலை" நடத்துகின்றன!! அப்படி, எந்தெந்த 'இனங்களில்' இவைகள் முதல் போட்டிருக்கின்றன என்பதையும் காண்போம்.

தங்கம் வியாபார பேரம் 367.62 கோடி

சரக்குகள் முதலியவைகள் 311.99 கோடி

தொழில்களுக்கு 227.84 கோடி

சர்க்கார் கடன், பாது காப்புப் பத்திரம் 361 கோடி

சூதாட்டமான வியாபார பேரம் போன்றவைகளுக்கு அதிகம் கொடுத்திருக்கின்றன என்று விளங்கும்! சர்க்காருடைய கடன்—பாதுகாப்புப் பத்திரங்களில் போட்டிருக்கும் ரூபாய் 361 கோடி யென்றுலும், இதனைப் போட்டுள்ள பாங்குளின் எண்ணிக்கை 269 ஆகும்! சர்க்காருடையஸ்டேட் பாங்கி ஒன்று மட்டும் பாது காப்பு—கடன்—பத்திரங்களில் 267 கோடி போட்டிருக்கிறது என்பதையும நாம் கவனப் படுத்திக் கொள்வோமாக!!

அண்ணல்

எனவே, மக்களுக்கு நன்மை தரும் 'இனங்களை' விட, தனிப்பட்ட முதலாளிகளின் வியாபாரச் சூதாட்டங்களுக்கு இவைகள் அதிகப் பணம் அளித்திருக்கின்றன. சேர்ந்த மூலதனத்தில் கிட்டத்தட்ட கால் பாதி அளவுக்கு இந்தக் காரியங்களுக்காகப் பாங்கிகள் வழங்கியிருக்கின்றன,

ஏன் வழங்குகின்றன? இந்தப் பாங்கிகளின் நிர்வாக டைரக்டர்களாகயிருக்கின்றவர்கள் அத்தனை பேருமே பிரபுக்கள்; சீமான்கள்! அதனல், தன்னைப் போன்ற பிரபுக்களுக்குத் தேவையான போதெல்லாம், கடன் கொடுக்கின்றன. நம்முடைய இந்தியன் பாங்கியையும். இண்டோ ஓவர்சீஸ் பாங்கியையும்தான்எடுத்துக்கொள்ளுங்களேன். டைரக்டர்களாகயிருக்கின்றவர்கள், ஏழை எளியவர்களா! கோடிக்கணக்கான ரூபாய்கள், இந்தப் பாங்குகளில் புரளுகின்றன.

°° "14 பாங்கிகள்! 148 டைரக்டர்கள்!! இந்த டைரக்டர்கள் பாங்கியின் பணத்தைக் கொண்டு ஆலைகளும், பெரிய பெரிய மாளிகைகளும் எழுப்புகிறார்கள். ஒரு குறிப்பிட்ட பாங்கி, 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' பத்திரிகைக்கும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்திருக்கிறது"

கடந்தவாரம் டில்லிப் பார்லிமெண்டில் நாஜி என்கிற உறுப்பினர் சொன்னர் இப்படி! 14 பாங்கிகளின் நிலை மட்டுமே அவருக்குக்கிடைத்திருக்கிறது. தனியார் நிர்வாகத்திலுள்ள எல்லாப் பாங்கிகளின் வண்டவாளங்களுமே இப்படித்தானிருக்கின்றன,

சில பாங்கி டைரக்டர்கள், தனியாகச்சில வியாபாரங்களை துவக்கி, அதன் மூலம் கடன்—தவணைமுறை — ஆகியவைகளுக்குப் பணம் கொடுத்து, சென்னையிலே கூட இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்று கேள்வி! அப்படிப் பட்டவர்களால் ஆலையரசர்களாக முடிகிறது! தொழிலதிபர்களாகவும் —தேயிலைத் தோட்ட மகிபர்களாகவும்—சர்க்காரையே ஆட்டிப்படைக்கும் சூத்ரதாரிகளாகவும் விளங்கமுடிகிறது!!

நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்கிறோம்! உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று அரசாங்கம் குரல் எழுப்புகிறது! ஆனல், இந்தப் பாங்கிகள் விவசாயத்துறைக்கு மட்டும் கடன் கொடுக்காது. ஆனல், நெல்லை வாங்கிப் பதுக்குகிறார்களல்லவா வியாபாரச் சீமான்கள் அவர்களுக்குப் பணம் கடன் கொடுக்கும். மக்கள் வாங்கி உபயோகிக்கும் முக்கியமான பொருள்கள் மீது கடன் கொடுத்து, அந்தப் பொருள்களைப் பூட்டிவைக்கவும் ஒத்தாசை செய்யும். 'பிராடு' செய்யும் ஆர்ப்பாட்டக்காரர்ளுக்கு உதவி செய்து அவர்களை மோசடி செய்யத் தூண்டும்! விலைவாசி உயர்வுக்கும் தங்க முடங்குத்துக்கும் காரணமே இந்தப் பாங்கிகள் யாவும் தனியாரிடமிருந்து பிடுங்கப்பட்டுத் தேசீய மயமாக்கப் படாததுதான்.

மொரார்ஜீதேசாய்க்குஏழை பொற்கொல்லர்கள் தலையில் கைவைக்கத் தைரியம் வரும்! இந்தப் பணத் தோட்ட பங்களா வாசிகளை நெருங்கவும் விரும்பமாட்டார்!!

ஐயோ! ஆண்டு இருபதாக காங்கிரசுக்கு இலட்சம் இலட்சமாக நன்கொடை கொடுத்தேனே!

--டால்மியா

டால்மியா—மூந்த்ரா — போன்றவர்கள் கதையை நாடுஅறியும். என்னென்ன மோசடி செய்தார்கள்? பெரிய பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனி ஆகியவைகளின் மூலம் 2 கோடி ரூபாய்களை விழுங்கியவர், டால்மியா! கடுமையான கண்டனம் கிளம்பிய பிறகு, அவருடைய கம்பெனிகளை சோதனையிட்ட பிறகு, மோசடிகள் நிரூபிக்கப்படவே வழக்குப் போட்டு இப்போது டால்மியா சிறையிலிருக்கிறார், அவருடைய கம்பெனி விவகாரங்களைப் பற்றி ஆராய சர்க்காரால் போஸ் கமிஷன் என்றொரு குழுவும் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையில் ரசமானபல உண்மைகளிருக்கின்றனவாம்! பணக்காரர்களின் சூதாட்டங்கள் யாவும் விளங்கி விடுமோ என்கிற அச்சமோ, என்னவோ, இன்னும் அந்த அறிக்கை மக்களுக்குத் தரப்படவில்லை!!

அந்த டால்மியா என்ன சொல்கிறார்,தெரியுமோ?இந்த வாரம், அவருடைய மனைவி, அறிக்கையொன்று விடுத்திருக்கிறார். அதில், கூறுகிறார்.

"ஐயோ! ஆண்டுகள் இருபதாக அகில இந்தியக் காங்கிரசுக்கு நான் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை கொட்டிக் கொட்டிக் கொட்டிக் கொடுத்தேன். கேட்டபோதெல்லாம் கொடுத்தேன்" என்று ஓலமிட்டிருக்கிறார்! அவரைக் கைது செய்ய நேர்ந்தமைக்குக் காரணம் மக்களுடைய எழுச்சி!!

இல்லையெனில், 'இருபதாண்டு'களாக மூடி மறைத்ததுபோல, இன்னும் மூடி மறைக்கவே முயன்றிருக்கும், காங்கிரசு அரசு.

ஏழு மனைவியராம், டால்மியாவுக்கு! சிறைவாசம் கூடச் சுகவாசமாகத் தரப்பட்டிருக்கிறதாம், அவருக்கு!!

2 கோடி ரூபாய்! மக்கள் பணம்!!

20 ரூபாயை ஒரு ஏழை மோசடி செய்யட்டும். அந்த ஏழையின் கதி என்னவாகும்? எத்தனைச் சட்டங்கள் பாயும்?

பிடிபட்டவர் ஒருவரே தவிர, பிடிபடாமல் இருப்பவர்கள்தான், ஏனைய பிரபுக்கள்.

பாங்கிகளை வைத்துக் கொண்டு, அப்பப்பா, அவர்கள் சுயமாகவும், வட்டியின் மூலமும், சம்பாதிக்கும் பணம் எவ்வளவு! அவர்கள் வீடுகளுக்குள் தானே மொரார்ஜிதேசாய் சொல்லும் 700 கோடி தங்கமும் பாளம்பாளமாகப் பதுங்கிக்கிடக்க வேண்டும்!!

°° அப்படிப் பட்டவர்களின் எதேச் சாதிகாரப் பணத் தோட்டங்களாக விளங்கும் பாங்கிகளை ஏன் தேசீய மயமாக்கக் கூடாது?

°° உணவு—உடை—வீடு போல, பணமும், மக்களின் ஒன்றுகி விட்டது. அந்தப் பணமே இன்றியமையாததாகவும் முன் சொன்ன, உணவு, உடை, வீடு ஆகியவைகளைப் பெற்றுத் தரும் சாதனமாகவும் விளங்குகிறது. அப்படிப் பட்ட பணத்தோடு விளையாடும் பாங்கிகளை ஏன் சர்க்காரே ஏற்று நடத்தக் கூடாது?

பாங்கிகள் தேசீயமயமானல் கிடைக்கின்ற நன்மைகளை, இதோ. பட்டியல் போட்டுத் தருகிறோம்.

1. பாங்கிகளில் ஓராண்டு இலாபமாக 35 கோடி ரூபாய்கள் வருகின்றன. இவை சர்க்காருக்கு உபரி வருமானமாகக் கிடைக்கும் ஒரு சில பணக்காரர்களின் தொந்தி வீங்கப் பயன் படும் இப்பணம் மக்களுக்கு நன்மைகள் மலரவும், தேசீயப்

(11-ம் பக்கம் பார்க்க)

பிரிண்டிங்,
பைண்டிங்
சகல
அச்சகவேலைகளுக்கும்
அசோகன் பிரிண்டர்ஸ்
48, பீட்டர்ஸ் ரோடு
சென்னை-14.
★ விரைவில் ஆரம்பம்!!
உரிமையாளர்:
அரங்கண்ணல் ★

காட்டிக் கொடுக்கும் சர்க்கார் !

பக்தவத்சலம் பச்சைத் துரோகம் !

விபீடணன் வேலை ஏன்?

தமிழ்க் கொலையாளிகள் !

பச்சையிளம் பாலகன்! பாய்கின்றன் ஒரு பாதகன்!!

ஐயோ! பாவி! படுபாதகா! என்று கூக்குரலிடுகின்றனர், மக்கள்.

"மகாஜனங்களே! ஏன் சப்தம் போடுகிறீர்கள்? அவன் வைத்திருக்கும் அரிவாள் எவ்வளவு பளபளப்பு பார்த்தீர்களா! அவன் ஓடிவரும் நேர்த்தி உங்களுக்கு வருமா? பார்த்து ரசிக்காமல் பதைக்கிறீர்களே, இப்படி?"—என்றொரு ஆள், துடிக்கும் மக்களைப் பார்த்து, உரத்துக் குரல் எடுத்துப் பேசினல், அந்த ஆளைப்பற்றி என்ன நினைப்பீர்கள்.

ஃ

அமைச்சர் பக்தவத்சலத்தைப் பற்றி நீங்களும் நானும் என்ன நினைத்தாலும், தமிழகம் சரியாகவே எடை போட்டு வைத்திருக்கிறது! அவருடைய தியாகம், சேவை, வயது ஆகியவைகளுக்கு மேல் அரச பாரத்தைச் சுமந்து சுமந்து அதிலேயே ஊறிவிட்ட கோளாறே என்னவோ. இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் 'முந்திரிக் கொட்டை'யாகி, தமிழகத்து மக்களை 'முட்டாள் களாக்கும்' மும்முரமான வேலையிலீடுபடுகிருர்!!

தவிக்கிறேம் நாம்! தமிழகத்து மக்கள் கொதிப்படைந்து உள்ளனர்! கேரளத்து காங்கிரஸ் முதல்வர் சங்கர் கர்ச்சிக்கிருர்! கன்னடத்து நிசலிங்கப்பா கண்டிக்கிருர்! ஆந்திர சஞ்சீவியார் அலறுகிருர்! ஆனுல் நமது பேசாத மடந்தை, பேருருவம், தேர்தல் புலி காமராசர் வாய் திறந்து ஒரு வார்த்தை செப்பவில்லையே!! திணித்து விட்டார்களே இந்தியை—டில்லிப் பாராளு மன்றத்தில், தி. மு. கவும் பிறரும் எவ்வளவோ எதிர்த்தும் லால் பகதூர் சாஸ்திரி இந்திக்கு அரியாசனம் சூட்டிவிட்டாரே இனி மேல் கோர்ட்டில் இந்தி. சட்டசபையில் இந்தி, சட்டப் புத்தகங்களில் இந்தி, வக்கீல் வாதாட இந்தி, கணக்கெழுத இந்தி, பள்ளிப்படிப்பில் இந்தி. வியர்பாரத்தில் இந்தி, இப்படி எல்லாத் துறையிலும் இந்தி நுழையுமாமே—என்ன இது அக்கிரமம், இதனைக் கேட்பாரில்லையா, நம்பியிருந்த பண்டித நேருவும் நட்டாற்றில் விட்டு விட்டாரே. என்று எரிமலைகளாய் நிற்கிறேம் நாம்! நமக்கு ஆறுதலோ, தேறுதலோ சொல்ல வேண்டிய தமிழ் நாட்டு முதலமைச்சர், "தாம்! தீம்!" எனப் பவனி வருகிருர், நாங்குநேரியில். தேர்தல் தானே, நமது திருமுக முதலமைச்சருக்குத் தெரிந்த கலை! அக்கலை பயிலுகிருர், அங்கே அவர்;! அவர் கிடக்கட்டும், நானிருக்கிறேன் என்று தன் நாலடி உருவைப் பெரிதாக்கி, நாக்கால் நவில முடியாத கூற்றென்றை, மாற்றுனும் பேச மன அதிர்ச்சி யடையும் வார்த்தைகளை, வாரியெடுத்துக் கொட்டியிருக்கிருர், கல்விக்கு அமைச்சராயிருக்கும் 'கனம்' பக்தவத்சலம்.

இந்திக்கு லால்பகதூர் வக்கீலாவதில் பொருளுண்டு! வழவழாக்களுக்கு என்ன அவசரம், அந்தப் பகதூருக்கு பதிகம் பாடுவதில்!!

டில்லி திணிக்கும் இந்தி மசோதாவுக்குப் பூச்சூட்டி, சூடன் காட்டி, வடவர் அர்ச்சிப்பதில் அர்த்தமிருக்கிறது! அடியார்க்கு அடியார், எந்த மந்திரி சபை வந்தாலும் எனக்கொரு இடம் என்று நிற்கும், இவருக்கு என்ன அரிப்பு வந்தது, ஆதரிப்பை அள்ளித் தர!! தமிழ் நாடே, கண்டிக்கிறது. தமிழ் நாட்டை வாழ்விக்க வந்த இத்தயாபரர் வரவேற்கிருர்.

இந்திச் சட்டம், நமக்குக் கேடு செய்யாதாம்! ஆங்கிலம் இருக்க, அதில் இடமிருக்கிறதாம்! ஐயைய்யே! இதைப் போய் அர்த்தமில்லாமல் எதிர்க்கிருர்களே!! டில்லியின் சட்டமே சட்டம்!!

—என்று, இங்கே, வரவேற்கிருர். வாழ்த்துகிருர். எல்லோருக்கும் புத்திமதி சொல்லப் புறப்படுகிருர், இப்புலி!!

ஆச்சாரியார், முதல் மந்திரியாயிருந்த போது, சாதாரண பார்லிமெண்டரி செகரட்டரியாக யிருந்தவர், பக்தவத்சலம் அந்த ஆச்சாரியாருக்கே புத்தி சொல்லுமளவுக்கு 'கனம்' வந்து விட்டது திருப்பெரும்புதூர் வீரருக்கு!!

கொலைவாளோடு குடிகேடன் நிற்கிருன் — குலக்கொழுந்து கொத்துப் படப் போகிறது. கூறுகிருர் இக்கோயில் மந்திரி, கொலைவாள் அழகாயிருக்கிறதாம், குத்தப் பாய்பவன் திறமை சாலியாம்.

டில்லிச் சட்டம் கெட்டிக்காரத் தனமானதாம்—நேர்த்தியாகத் தயார் செய்யப்பட்டதாம்—ஆங்கிலத்துக்கு உறுதி மொழி தரப்படுகிற—தாம் அந்நிய மொழி இந்திக்கு ஆதிக்கம் வராதாம் — தமிழ் சாயாதாம் — தமிழ் மக்கள் சங்கடப்படும் நிலைவராதாம்!!

அங்கே, டில்லிப் பாராளு மன்றத்தில் கழக உறுப்பினர்கள் காரசாரமாகக் கண்டிக்கிருர்கள் மசோதாவை! கழகத்தவர் கிடக்கட்டும், பக்தவத்சலனரின் கட்சியைச் சார்ந்த காங்கிரஸ்காரர்கள் கூடக் கண்டிக்கின்றனர், இச்சட்டத்தை!! எங்கே உறுதி மொழி?—'மே' வேண்டாம் 'ஷல்' எனும் சொல்லைப் போடு — என்ன அவசரம்? இந்தியைத் தென்ஞடு ஏற்காது—என்றெல்லாம் அங்கே லால்பகதூரைக் கேட்கிருர்கள், கேள்வி மேல் கேள்வி!

ஆனுல், அமைச்சராகத் தமிழ் நாட்டிலிருப்பவர் இங்கிருந்து கைலாகு தருகிருர்! அதை எடுத்துப் பார்லிமெண்டில் படித்துக் காட்டி, "இந்தி வந்தால் தமிழ் அழியும். ஆங்கிலம் போய் விடும் என்று நீங்கள் கத்துகிறீர்கள். ஆனுல் சென்னை மந்திரி இதோ செப்புகிருர், பாருங்கள்!", என்று எள்ளி நகையாடி யிருக்கிருர், லால்பகதூர் சாஸ்திரி.

பக்தவத்சலம் என்ற பெயருக்கேத் தமிழ் நாட்டில் 'பழி' யொன்றுண்டு! அப்பெயரையே, அச்சத்துக்கும் துக்கத்துக்கும் உரியதெனக் கருதுவோருண்டு! அவர் சகல கலா வல்லவர் அல்ல நாளைக்கு இந்தியில் சட்டம் செய்தால் எங்கோ ஒரு மூலைக்கு ஓட வேண்டியவர் தான். ஆனுலும், விபீடணராகி, வீம்புக்கு அச்சாரம் பேசி, தனது அதிதீவிர சாமர்த்தியத்தை 'எசமான்' களுக்கு நிருபிக்கிருர்!!

என்ன அவசரம்? பொறுத்து இருந்து பார்க்கக் கூடாதா? அங்கே எதிர்ப்பு எரிமலைகள் வெடித்துக் கொண்டிருக்கும் போது இங்கிருந்து ஆதரவுக் குரல் எழுப்ப வேண்டிய அவசியம் என்ன!!

இவராலா, தமிழகம்வாழும்! நம் எதிர்காலம் உருப்படும்!!

"இப்படி ஏனய்யா சொன்ஞய்? இந்திக்காரன் திமிரை விடலாமா?", என்று காமராசராவது கேட்டாரா—என்ருல், இல்லை;!

ஏன் கேட்கப் போகிருர்—அவருக்கென்ன பிள்ளையா! குட்டியா!! அவருடைய பரம்பரை அவரோடு அஸ்தமனமாகி விடும். அவதிப் படப் போகின்றவர்கள், நாமன்றே!

நாடே கொதிக்கிறது இந்தித் திணிப்பு கண்டு—அவரையொத்த முதலமைச்சர்கள் அபிப்பிராயங்களை வெளிப்

(11-ம் பக்கம் பார்க்க)

சிதம்பரத்தில் 15—4—'63 அன்று காலை தி, மு. க. மத்திய செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் தில்லை வில்லாளன் அவர்களின் மீனுட்சி இல்லத்தில் அவரது சகோதரர் தீ. வீரப்பசாமி மகன் நக்கீரனுக்கும் திரு. கணபதி அவர்கள் மகள் கலாவதிக்கும் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

மணமக்கள்வாழ்க!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களை குற்றம் சுமத்த முடியும்! பாலைவனமோ, மலையோ, உங்களைக் கோபித்துக் குற்றமா சுமத்தப் போகிறது? இயற்கை தான் கொலைகளை விரும்புகிறதே! அது ஏன் 'ஜட்ஜா'கப் போகிறது?

சமுதாயம்? புனிதமானதல்தல்லவா எனலாம்! ஆம், அது தான் மனிதனை இன்று காப்பாற்றுகிறது. தனி நபர் புனிதமானவன். ஏனெனில் அவனைப் போலப் பலர் இருந்தால்தான் சமுதாயம் உருப்பெறும். சமுதாயமே சட்டநாதன்! சரி கும்பிடுவோம். வணங்குவோம் சட்டநாதனை.

ஆனால், இந்த சட்டநாதனை சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் அரசாங்கம் மட்டும் கொலை செய்யலாம். இன்னொரு சமுதாயத்தையே உருமாற்றலாம்! இரண்டு லட்சம் பேரை ஒரு சண்டையில் ஒரு அரசு கொன்றால், அந்தச் சமூகத்தை அது பூண்டோடு அழிக்கிறது என்று தானே பொருள்? தன்னுடைய கொலை ஆசையால் அச்சமூகத்தை அடிமைப்படுத்துகிறது. அதற்கு முடிவு தேடுகிறது.

ஜுலை 3: கொலை என்பது நூதனமான இன்ப உணர்வு! இரகசியமான உணர்வு! மனிதன் இதை மிகமிக இரகசியமாக விரும்புகிறான், அவன் இந்த இன்பத்தைப் பெற எதிரே நிற்கும் உயிருள்ள ஒன்றின் மீது, அதனுடைய உடலின் மீது, ஏதோ ஒரு கருவியால் சிறு துவாரத்தை உண்டு பண்ணுகிறான். சிறு துவாரம் தான்! சிறு கத்திக் குத்துதான்! அந்தத் துவாரத்திலிருந்து 'புஸ்' என்று சிகப்பாக ஒரு பொருள் வெளியே வருகிறது. அதை இரத்தம் என்கிறோம்! அந்த இரத்தம் தான் நமக்கு உயிர் கொடுத்து உலவ விடுகிறது! அது வழிய வழிய, நமக்கு எதிரில் உயிரோடு கொஞ்ச நேரத்துக்கு முன்பு இருந்தது, வெறும் சதையாய், உணர்ச்சியற்றதாய், ஆசையற்றதாய், ஆகிவிடுகிறது. பிணமாகி விடுகிறது.

ஆகஸ்டு 5: கொலை செய்த பல பேரைக் கண்டித்திருக்கிறேன். தண்டித்திருக்கிறேன். எப்படி? தூக்கிலே போடச் சொல்லி! ஒருவன் சிறு கருவியால் இன்னொரு உயிரில் துளை போட்டுத் தொலைத்தான். நான் கழுத்தை வெட்டச் சொல்லித் தண்டனை தந்து தொலைத்தேன். நானும் பல பேரைப் போலக் கொலைகாரன் தானே? இதைச் செய்தவனை இப்படிச் செய்யவேண்டும்? அதுதான் சரி; என்கிற என் ஆத்ம திருப்திக்காகச் சட்டத்தின் பெயரால் நானும் கொலை செய்தவன் தானே?

ஆகஸ் 10: யாருக்குத் தெரியும்? யார் நினைக்கிறார்கள்? ஒரு உயிர் போவதைப் பற்றி நான் அக்கரை காட்டாதவனைப் போலப் பார்த்தும் பாராமலுமிருந்தால் என்மீதுயார் சந்தேகப்பட முடியும்?

ஆக 15: ஏதோ ஒரு ஆசை. புழுப் போல இந்த ஆசை என் மனதுக்குள் அசைகிறது. என் உடம்பெல்லாம் இந்த ஆசை பரவுகிறது. பயமாகவும் இருக்கிறது! எங்கிருந்து வந்தது இந்த ஆசை? என்ன தப்பு? எனக்கும் ஆசை வராதா! இத்தனை பேரைத் தண்டித்திருக்கிறேனே, அவர்கள் செய்தது போல் நானும் ஒரு கொலை செய்தால், என்ன? ஏ, அப்பா! சிறு கருவியால் உடலைத் துளைப்பது...... அந்த

இரத்தம், சிவப்பாக வழிந்தோடும்... ஒரு உயிர் சாகும், சாவு! அதை அவசியம் பார்க்க வேண்டும். சாவும் போது எழும்புகின்ற ஒலி எப்படியிருக்கும்? இதைப் பார்த்து விட வேண்டியது தான்!

ஆகஸ்டு 22: முடியாது: என்னைக் கட்டுப்படுத்த இயலவில்லை. நான் இன்று என் வேலையாள் அறைக்குள் சென்றேன். கூண்டுக்குள் அவன் ஒரு அழகான பறவையை வைத்திருந்தான். அதைப் பார்த்தேன். அவனை வேறு வேலையாய் வெளியே அனுப்பினேன்! நைசாக அந்த அறைக்குள் நுழைந்தேன். திருட்டுத்தனமாக எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் தனி இன்பம் இருக்கிறது!! இன்னொருத்தரை ஏமாற்றுவதில் அடடா எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறது? அவனை விட நாம் சமர்த்தியசாலி என்கிற தன்னம்பிக்கை தானே இந்த ஆனந்தத்துக்குக் காரணம்? தற்பெருமையோ எதுவோ எல்லாருக்கும் இது இருக்கிறது! இப்படியும் அப்படியும் பார்த்தேன். அந்தப் பறவையைக் கையில் எடுத்தேன். கக கத வென்றிருந்தது. அதன் இருதயம் துடிப்பது எனக்குத் தெரிந்தது, என் அறைக்குப் போனேன். நைசாக அந்தப் பறவையை என் கைக்குள் வைத்து அழுத்தினேன். அதன் இருதயம் வேக வேகமாக அடிக்க ஆரம்பித்தது! ஆகா! என்ன இன்ப உணர்வு! ஆனால், இரத்தம் வரவில்லை. கத்திரிக்கோலை எடுத்தேன். குரல் வளையில் ஒரு துண்டு போட்டேன். வாயைப் பிளந்தது! தப்பிக்க முயன்றது. அதன் இறகுகள் மிருதுவாக இருந்தன. அதன் துடிப்பை நான் இன்று போல் என்றும் கண்டதில்லை. இரத்தம் வழிந்தது! ஆகா! இந்தப் பறவையின் சதையைத்தானே சமயற்காரன் நமக்கு வைக்கிறான்? இந்த இரத்தம்! ஒரு துளியை எடுத்து நாக்கில் வைத்துக் கொண்டேன்! ருசித்தது. உறிஞ்சினேன். கொஞ்சம் தான் இரத்தம் இருந்தது. பாவம்! சிறு பறவை!! ஐயோ, வேலைக்காரன் வந்து விட்டால்? என்னைப் பற்றி என்ன நினைப்பான்? நான் என்ன செய்வது எல்லாக் கொலையாளிகளும் என்ன செய்வார்களோ அதைப் போலத் தோட்டத்துக்குப் போய் ஒரு குழியைத் தோண்டிப் புதைத்து விட்டுப் பேசாமல் வந்து விட்டேன். யாருக்கும் இது தெரியாது. நான் திராட்சைச் செடியின் அடியில் புதைத்தேன். ஒவ்வொரு நாளும் நான் அந்தச் செடியின் பழங்களை ருசியாகத் தின்பேன்!

பணியாள் வருந்தினான்; பறந்து போய் விட்டது தன் பறவை என்று எண்ணினான்; அழுதான். என்னை அவன் சந்தேகிக்கவில்லை. பலே! பலே!!

ஆக 25: நான் யர்ராவது ஒரு மனிதனைக் கொல்லவேண்டும் ஆமாம், அவசியம் கொல்ல வேண்டும்.

ஆக 30: செய்து விட்டேன்! எவ்வளவு சுலபமாகயிருந்தது. மாலை நேரம். ஒய்வுக்காக நடந்து சென்று கொண்டிருந்தேன். என் மனதெல்லாம் கொலை! கொலை!! கொலை!! நினைவுதான். எதிரே சிறு குழந்தை ரொட்டி தின்று கொண்டிருந்தான்.

"வணக்கம் சார்!" என்று மழலை மொழியில் சொன்னான். நான் அக்குழந்தையைப் பாரத்தேன்.

இதைக் கொன்றால்...?

நான் அப்பையனைக் கேட்டேன், "தம்பி! நீ மட்டும் தனியாகவா இங்கே நிற்கிறாய்?"

"ஆமாம் சார்!"

(10-ம் பக்கம் பார்க்க)

இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

'சிவராஜ்' ராஜாமிர்தம் (காலை, மாலை உள்ளுக்கு)

'சிவராஜ்' ராஜ்பில்ஸ் (காலை, மாலை உள்ளுக்கு)

'சிவராஜ்' தாமரைத் தைலம் (ஸ்நானத்திற்கு)

'சிவராஜ்' லேபனத்தைலம் (மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00

(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் : : சேலம்-2

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனைக் கொல்ல வேண்டும்—அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டும்—என்கிற உணர்வு தலைதூக்கியது. பையனை நெருங்கினேன். ஓடி விடுவான் என்று எண்ணினேன். அவசரமாகஅவன் கழுத்தைப்பிடித்து ஒரே அழுத்தாக அழுத்தினேன். அவன் மிரண்டான்! என்னைப் பீதியுடன் தனது அழகான விழிகளில் பார்த்தான்! ஆகா! என்ன அழகான கண்கள்!! புறுவின் கால்களைப் போன்றமிருதுவானகைகளால் என்கைகளைப்பிடித்துக் கொண்டான். அவ்வளவுதான்! பிறகு அசைவேயில்லைஒருஉயிர்போய் விட்டது......"என்ன சார்!", என்னைப் பார்த்துக் கொஞ்ச நேரத்திற்கு முன்பு கேட்ட குழந்தையா இது!! நைசாக அருகேயிருந்த குழியில் தள்ளினேன். வீட்டுக்குத் திரும்பினேன்! சாப்பிட்டேன். என் மனதில் பயமே இல்லை. அன்று மாலை ஆனந்தமாகயிருந்தேன். என்றாலும், அந்த இரத்தம்... ஆ! அதைக் காணவில்லையே!!

ஆக **30:** குழந்தையைக் கொன்றவனைத் தேடுகிறார்கள். உடல் கிடைத்திருக்கிறது.

செப் **1** இரண்டு ரௌடிகளைக் கைது செய்திருக்கிறார்கள். போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லையாம்.

செப் **2:** குழந்தையின் பெற்றோர்கள் என்னிடம் வந்து புகார் செய்தனர். அழுதனர். ஆகாகா!

அக் **6:** துப்பு ஒன்றும் கிட்டவில்லை. யாரோ அடித்துக் கொன்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது...... அந்த இரத்தம் வந்து கொலை நடந்திருந்தால்...? என் மனம் அதே கேள்வியை அடிக்கடி கேட்கிறது.

அக் **10:** இளவயதில் என் மனதை எப்படிக் காதல் ஆட்கொண்டதோ அப்படி இந்த ஆசை ஆட்டுகிறதே!

அக் **20:** இன்னுமொன்று, இன்று! ஆற்றோரம் நடந்து கொண்டிருந்தேன். ஒரு ஓரத்தில் ஒரு மீனவன் தூங்கிக் கொண்டிருந்தான். பக்கத்தில் ஒரு மண் வெட்டி கிடந்தது. எடுத்தேன்! அவன் தலையில் போட்டேன். மண்டை இரண்டாயிற்று. இரத்தம்... ஆ! இரத்தம்... வழிந்தது. அமைதியாகத் திரும்பினேன். நீண்ட நாளாக நான் கொண்டிருந்த வேட்கை முற்றுப் பெற்றது போல ஒரு நிம்மதி......

அக் **25:** செம்படவரின் கொலை பெரிய பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. அவனோடு சேர்ந்து மீன் பிடிக்கும் அவனது மைத்துனன் கொலை செய்தான் என்று கைது செய்யப்பட்டான்.

அக் **26:** பிரேத விசாரணை நடந்தது. ஊர் முழுதும் அவன் மைத்துனனையே சந்தேகிக்கிறது.

அக் **27:** "ஐயோ! நான் கொல்லவில்லை. பக்கத் தூருக்குப் போயிருந்தேன். எனக்குத் தெரியாது," என்று அவன் அலறுகிறான். யாரும் அதை நம்பத் தயாராக இல்லை.

அக் **28:** வக்கீலின் குறுக்கு விசாரணையில் ஏதோ உளறி விட்டான்! அதை வைத்து அவனைத் தூக்கில் போட நீதி மன்றம் உத்திரவிட்டு விட்டது. ஆகா! நீதியே நீதி!

நவ **15:** அப்பீல் போட்டிருக்கிறான். என் முன்பு இன்று அவனுடைய அப்பீல்விசாரணை நடக்கப்போகிறது.

ஜன **25:** சாவு! சாவு! சாவு! 'உனக்குத் தூக்கு', என்று அவனுக்கு இன்றுதீர்ப்பளித்தேன். ஆகா! அரசாங்க வக்கீல்அவன் தான் கொலைகாரன் என்பதற்கு எவ்வளவு ஆதாரங்களை அடுக்கிக்கொண்டே போனார் தெரியுமா! அன்று ஒரு கொலை என் கையால் நடந்தது. இன்னொரு கொலைக்கு என்கையால் உத்திரவிட்டேன். அவனைத் தூக்கில் போடுவதை நேரில் போய்ப் பார்க்கப்போகிறேன்!

மார்ச் **20** இன்று காலையில் அவனைத் தூக்கில் போட்டார்கள். ஒருவனுடைய தலையை வெட்டுவதைப் பார்க்க எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது, தெரியுமா! அலையைப் போல் இரத்தம் பீறிட்டுக் கொண்டு அடித்தது. ஓடிப் போய் இரு கையாலும் இரத்தத்தை அள்ளி ஆனந்தப்பட வேண்டுமென என் மனம் துடித்தது! நான் நீதிபதி—எப்படிப் போவது அருகில்!! நான் இன்னும் சில காலம் காத்திருக்கவேண்டும். என்றாவது ஒரு நாள் அந்த மகிழ்ச்சியையும் அனுபவிக்க வேண்டும்.........

ஃ ஃ ஃ

அந்தக் குறிப்பில், இன்னும் சில நாட்கள் இருந்தன. ஆனால் அவைகளில், புதிய கொலைகள் ஒன்றும் இல்லை. குறிப்புகளைப் படித்துப் பத்திரப்படுத்திய அரசாங்கக் காவலர் சொல்கிறார்:—**"உலகில், இவரைப் போலச் சமூகத்தின் கண்களுக்குப் புலப்படாத கொடூரமான பைத்தியக்காரர்கள், உல்லாசபுரியில் இன்னும் ஏராளம் இருக்கத் தான் செய்கிறார்கள்!!"**

நீங்கள் எந்த வேலை செய்தாலும்..

செய்யும் வேலை நாட்டிற்காக செய்யப்பட்டதாகும்

திறமை, பலம், இதற்காக பாடுபட்டு வரும் இந்தியாவின், நீங்கள், உங்கள் வாழ்வு, செய்யும் வேலை ஒவ்வொன்றும் ஒரு அங்கமாகும். திறமையில்லாமை, மரியாதை இல்லாமை ஆகியவைகளுக்கு இடமே கிடையாது. உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதை திறமையுடன் செய்யுங்கள். தாமதத்தை தவிருங்கள். சுமுகமாக செயல்படச் செய்யுங்கள். நம் செயல் திறன் உயர உறுதியுடன் உழைத்து வெற்றிக்கான வழியை வகுப்போம்.



உறுதியாக உழையுங்கள்

அதிக உற்பத்திக்கும், பலமான பாதுகாப்புக்கும் அது தேவை

DA 62/F9

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்கும், பயன்படும்,

2. வியாபாரிகள்சூதாட்டம், கள்ளப்பதுக்கல் முதலியவைகள் குறைந்து விலைவாசியை மட்டுப்படுத்த முடியும். சர்க்கரை கிடைகவில்லை, அரிசி கிடைக்கவில்லை என்பது போன்ற 'இல்லை'க்குரல் அடங்கும். வியாபாரிகள் மடக்குவதால் தானே இக்குரல் கிளம்புகிறது!

3. கிராமங்கள் தோறும் 'ஸ்டேட் பாங்கி'களை உண்டாக்கிக் கிராமவாசிகளுக்

டால்மியா

குக் கடன் தரவும், உதவவும், உற்பத்தி பெருகவும் பாடுபடலாம்.

4. வெளிநாட்டுச்செலாவணி—தங்கபேரம்—முதலியவைகளில் நடக்கும் விரோதமான செய்கைகள் மறையும்.

5. நமது ஏற்றுமதி—இறக்குமதி வாணிபம் பெருகும்.

6. வரி 'டிமிக்கி' தர முடியாது, சீமான்களால்! 'பிளேக்மணி' எனப்படும் 'கள்ளப்பதுக்கல் பணம்' வெளிவரும்.

7. மக்களுடைய தேவைகள், தொழில்கள் ஆகியவைகளுக்குப் பாங்கிகளின் மூலதனம் பயன் படும். தனிப்பட்ட ஒரு சில டைரக்டர்களின் பிரபுத்துவக்கொட்டம்மறையும்.

8. சீமான்கள் வளர முடியாது சோஷியலிசமுறை, படிப்படியாகஉருவாக,உதவும்.

9. அடிக்கடி சில பாங்கிகள் கவிழ்ந்து பணம் போட்டவர்கள், 'அய்யோ! அய்யோ!' என்றலறுகிற அவலம் மறையும்.

தேசிய மயமாக்குவதால் இவ்வளவு நன்மைகள் ஏற்படும் என்கிறபோது ஆளுகின்ற காங்கிரஸ் ஏன் தயக்கம் காட்டுகிறது?

துணிவுள்ளவர்-தைரியசாலி-திறமை வீரர்-என்று பாராட்படும் மொரார்ஜிதேசாய் ஏன் அஞ்சுகிருர்?

அதற்கான பதிலை, நாம் சொல்லவேண்டியதில்லை. இதோ, 'இன்சாப்' என்கிற பெயரில் 'மெயில்' ஏட்டின் நிருபர் எழுதுகிருர்.

"இப்போது துணைத்தேர்தல்கள் வந்து விட்டன. கல்கத்தாவிலுள்ள சுராஜுத்தீன் என்கிற சுரங்கக் கம்பெனிக்கு 'லைசன்ஸ்' கொடுத்து அதற்காகக் காங்கிரஸ்கட்சிக்கு அக்கம்பெனியிடமிருந்து மத்ய மந்திரி மாளவியா பல லட்ச ரூபாய் நன்கொடை வாங்கியதாக வந்த சேதி பலருக்குக் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது......பணமில்லாமல் எந்தக்காரியம் நடக்கமுடியும்? பணத்தை, இந்த வழிகளில் அல்லாமல் எப்படிக் கட்சிக்குச் சேர்க்கமுடியும்?டில்லியிலுள்ள பெரிய மந்திரிகள் முயற்சித்தாலன்றி அதிகப்பணம் கட்சி நிதிக்குக் கிடைக்காது என்று மாகாண கமிட்டிகள் நினைக்கின்றன...மாநிலங்களில்பணம் வசூலிக்கப் பற்பல முறைகள் கையாளப் படுகின்றன. சென்னையில், பணக்காரர்களை "அணுகும் விதத்தால்" கட்சி நிதிக்குப் பணம் வசூலிக்கப்படுகிறது...சென்னையில் பெரிய தொழிலதிபர்களிடமிருந்தும், பஸ் முதலாளிகளிடமிருந்தும் பணம் வசூலிக்கப்படுகிறது. கோயம்புத்தூர்மில்அதிபர்கள் நிறைய உதவுகிருர்கள்...ஆளும் கட்சியிடமிருந்து இந்த முதலாளிகளுக்குச் சலுகைகளும் நன்மைகளும் கிடைப்பதால், முதலாளிகள் காங்கிரசைத் தாஜா செய்துகொள்ள ஆசைப்படுகிருர்கள்."

ஆலை முதலாளிகளுக்குப் பணம் தருவது பாங்கு!

காங்கிரசுக்குப் பணம் தருவது ஆலைமுதலாளிகள்!!

இப்படியிருக்கும்போது,

காங்கிரசாட்சி,

எப்படி,

பாங்கிகளை,

தேசியமயமாக்கும்?

"காங்கிரஸ்--முதலாளிகளின்களின் மோகனக்கூடாரம்!", என்ருல், கோபித்துக் கொள்கிறீர்களே! கூறுங்கள், இதற்கு பதில்!!

மொரார்ஜி அறிவிப்பு

14 காரட் தங்க நகைகள் செய்ய போதுமான 14 காரட் தங்கம் கிடைக்கச் செய்ய, அரசு உறுதிமொழி தராது என்று இந்த வாரம் கை விரித்திருக்கிருர்.

காட்டிக் . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

படையாகச் சொல்கிருர்கள்—நாங்கு நேரியில், காமராசர் பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டுத் தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிருர்!!

தமிழகத்து காங்கிரஸ் மந்திரி சபை, தமிழ் நாட்டுக்குச் செய்துள்ள, துரோகங்கள் பல உண்டு.

ஆனல், இந்தித் திணிப்பு மசோதா விஷயத்தில், அது செய்திருக்கும் துரோகம்—என்றுமே மன்னிப்பைப் பெற முடியாதது! மறக்கவும் முடியாதது!!

பேசாமலிருந்து தொலைத்தால் என்ன — உம்முடைய கருத்தைக் கேட்டா, இந்தியத் துணைக் கண்டத்தின் காரியம் நடக்கிறது—ஊதத் தெரியாதவன் ஊதிக் கெடுத்ததைப் போல உளறுவானேன்!

எதிர்காலத் தமிழுலகம், உம்மைப் பற்றி என்ன சொல்லும் என்பதையாவது எண்ணிப் பார்க்கக் கூடாதா? என்ன அப்படி அவசரம் வந்து விட்டது, இங்கிருந்து லால்பகதூருக்கு ஆதரவுக் குரல் கொடுக்க!!

இதுதானு, தமிழுக்கும் தமிழகத்துக்கும் செய்யும் சேவை? ஏன் இந்தி! எதற்கு இந்தி!! இந்தியால் என்ன ஆகும்? எதற்கு இலாயக்கு அந்த இந்தி?

பதவிப் பளபளப்பு பெறலாம்! லால்பகதூரின் பாராட்டைப் பெறலாம்!

ஆனல், மாபெரும் தமிழினத்துக்கன்ருே துரோகம், செய்கிறீர்!!

உம் கட்சியில்லை யென்ருலும், உம்மை ஈன்றெடுத்துச் சுமக்கும் இத்தாய்த் திருநாட்டில் தவழும் சேய்கள், டில்லிப் பட்டணத்தில் தனித்து நின்று சவாலுக்கு வரும் இந்தியை எதிர்க்கும் போது போது, நீர் சும்மாயிருக்கலாகாதா! துரோகிகளுக்கு ஏன் துதிபாடச் செல்கிறீர்!!

ஐயகோ! ஜுடாஸ் என்பதா, துரோகி என்பதா, விபீடணரே என்பதா, உம்மையும் உமது ஆட்சியையும் எந்தப் பெயரைச் சொல்லி அழைப்பது!

எண்ணும்போதே இதயம் வேகின்றது—வயதானவர், நைசாகப் பேசுகின்றவர், இரக்க சுபாவமுள்ளவர், காமராசரைப்போல முரட்டு ஆள் அல்ல என்றெல்லாப் பக்தவத்சலத்தோடு பழகியவர்கள் சொல்வார்கள்—ஆனல், இந்தி

(12-ம் பக்கம் பார்க்க)

அருமையான கண்ணப்பனுர்!



ஆரவாரமில்லாத பெரியார்! வயதானபோதும் கழகப் பணியென்ருல் வாலிபரைப் போலப் பாடுபடுகிறவர்! புதிதாக கழகத் தோழரானவரல்ல; சுயமரியாதை இயக்கத்துவக்கக்காலத்திலிருந்தே காஞ்சிபுரத்தில் பணிபுரிந்தவர்! அண்ணாவைவிட மூத்தவர்; ஆனல் அண்ணாவிடம் அவர் காட்டிடும் மரியாதையும் அன்பும் என்றும் மறக்க முடியாது! காஞ்சியில் கவுன்சிலராகயிருந்தார்; கூட்டுறவு பாங்கியின் உறுப்பினர்; அவர்! நகரப் பணிகளெல்லாம் ஈடுபட்டிருந்தார்; இரு திங்களுக்குமுன் என்இல்லத்துக்கு வந்து, சிரித்த முகத்தோடு, என் உடல் நலம் கேட்டுச் சென்ருர்; வருகிறேன் அடுத்தமுறை யென்ருர்; போய் விட்டார், திரும்பாத ஊருக்கு!! காஞ்சிபுரத்திலுள்ள கழகத்தார், அவரது பிரிவால், பெறுகின்ற சோகம் பெரிது. அந்தச் செய்தியைத் தோழர். வெ. சம்பந்தம்தொலைபேசிமூலம் சொன்னபோது, என் மனமே ஒரு நிலையில் இல்லை. ஒரு தடவை பழகியோர் அந்தக் கண்ணப்பனுரை மறத்தல் இயலாது!! 10-4-'63 அன்று காலமாகிவிட்ட அப்பெரியாருக்கு எனது குடும்பத்தின் அன்பு கலந்தமரியாதைகளைக் காட்டுவதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்? அவருடைய சகோதரர்துரைசாமி அவர்கட்கும், அவருடைய புதல்வர், மருமகனுர், குடும்பத்தோர் ஆகியோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்மீது அன்பு காட்டியநல்லுருவம்ஒன்றை இழந்தேன்! இனி எப்படிப் பெறப்போகிறேன்!!

அரங்கண்ணல்

புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். எனது புத்தகசாலையில் இருக்கும் புத்தகங்கள் அனைத்தும் இரவல் வாங்கிய வைகளே!!

— பேர்னுட்ஷா.

பதிவு எண்: எம். 7466

இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டது.

கேள்வி பதில்

கே: சம்பத் நடத்திய இந்தி எதிர்ப்பு மறியலைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?

கோவிந்தசாமி
வி.சி.கார்டன்

ப: அவசரமான செயல்!

கே: அறப்போர் இனியாவது சரியாக—முன்னதாக—வருமா?

பழமலை
உத்தமபாளையம்

ப: அதற்காகவே அச்சகம் அமைத்திருக்கிறேன். சரியாக—முன்னதாக மட்டுமல்ல—நான் விரும்பும் புதுமைகளையெல்லாம் செய்து பார்த்துவிடுவது என்றும் திட்டமிட்டிருக்கிறேன்! லைசென்ஸ் யாவும் வந்ததும் ஓரிரு வாரங்களில் பாருங்கள்.

கே: இந்தி மசோதா பற்றி நிதியமைச்சர் பக்தவத்சலம் விட்ட அறிக்கைப் பற்றிஎன்ன கருதுகிறீர்கள்?

சுப்பிரமணி
தி. நகர்

ப: தமிழ்த்துரோகி என்று எதிர்காலம் கூறும்படி நடக்காதீர்கள் என்ருர் நமது மதியழகன்! தமிழுக்கு மட்டுமல்ல எதிர்காலமே என்னைத் துரோகியென்று தூற்றும்படி நடந்துக்கொள்வேன் என்று காமராஜர் சுமக்க வேண்டிய கெட்டபெயரைத் தானே போய்ச் சுமந்து கொள்கிருர்!!

கே: இந்தியை எதிர்த்து விரைவில் தி. மு. க. அறப்போர் துவங்குமா?

லியோ
மயிலை

ப: தி. மு. க. செய்ய வேண்டியவற்றை எப்போதும் செய்யும்!

(11-பக்கத் தொடர்ச்சி)

திணிப்பு விஷயத்தில் அவசரப்பட்டு அவர் "காட்டிக் கொடுத்ததை" நினைக்க நினைக்க, அந்த எண்ணங்களையெல்லாம்சாற்றுகிறது! எரிமலையாகிறது மனம்!

இந்தித் திணிப்பு மசோதாவில் ஆங்கிலமும் இருக்க இடம் செய்து தரப்பட்டிருக்கிறது", என்கிறீரே! சட்டம் படித்துவக்கீலாயிருந்த உம்மால், எந்த இடத்தில் அந்த உறுதி இருக்கிறது என்று சொல்ல முடியுமா? பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்லிமெண்டு கமிட்டி ஆராயலாம் என்றிருக்கிறது! அக்கமிட்டியில் தென்னகத்துக்கு எத்தனை இடம் கிடைக்கும்? அப்படியே கிடைத்தாலும்அந்த முடிவுகள் பார்லிமெண்டுக்கு வந்தால், அங்கே தமிழ்நாட்டார் எத்தனைப்பேர்? வடவர் எத்தனைப் பேர்?

சட்டத்தில் சந்து பொந்து உண்டாக்கிவிட்டு எதிர் காலத்தில் என்ன செய்ய முடியும்? 'ததாஸ்து' போட வேண்டியது தானே!!

நீர் அவ்வளவு பெரிய மேதாவியாகவேயிரும், அடக்கம் வேண்டாம், அச்சம் ஏற்படக் கூடாதா, தமிழ் நாட்டைப் பாதிக்கும் விஷயமாச்சே என்கிற தயக்கமாவது இருக்கலாகாதா! சரணுகதி உமக்குப் பழக்கமாயிருக்கலாம் — உமது மந்திரிசபைக்குவழக்கமாயிருக்கலாம்—அதற்காக எதிர்காலப் பரம்பரையா, உங்களைப் போன்ற பரமாத்மாக்களால், படுபாதாளத்தில் அமிழவேண்டும்! பயங்கரமாயிருக்கிறதே உங்களை நினைக்க! நீங்களா, தமிழகத்தையும் தமிழ் நாட்டையும் வாழவைக்கப் போகிறீர்கள்? சேச்சே!!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி. பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர்: எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட்ரோடு, சென்னை-6